முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 15.04.2026 அ.வ.எண்.48/2012 பி.வா.சா.2. ராஜூ, த/பெ. பெருமாள் தேவர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது வீடு எங்கு உள்ளது என்றால் எம்மேகவுண்டன்பாளையத்தில் உள்ளது தற்போது நல்லட்டிபாளையத்தில் குடியிருக்கும் வீடு உள்ளது. சுமார் 50 ஆண்டுகளாக நல்லட்டிபாளையத்தில் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். பி வா சா ஆ 10 ஆவணம் 05.03.2026 ம் தேதியன்று செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீது என்றால் சரிதான். 05.03.2026 க்குமுன்பு செலுத்திய வரி ரசீது களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்டு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. இதற்குமுன் செலுத்திய ரசீதுகள் எனது வீட்டில் உள்ளது.

2) எனது பிரமாண வாக்குமூலத்தில் ரங்கதேவர், இருளப்ப தேவர், குப்பத்தேவர் ஆகியோர்கள் பெயரில் கூட்டாக பாத்தியப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ரங்கதேவருக்கு ஒரு பங்கும் இருளப்ப தேவர், குப்பத்தேவருக்கு ஒரு பங்கும் பாகம் பிரித்து கொண்டதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குப்பத்தேவருக்கு ஒதுக்கப்பட்ட வீடு தென்புறமும்,, இருளப்ப தேவருக்கு ஒதுக்கப்பட்ட வீடு வடபுறமும் உள்ளதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) இருளப்பதேவருக்கு மாட்டுச்சாளை ஒதுக்கப்பட்டதாகவும் அதை அவர் அனுபவித்து வந்ததாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாட்டுச்சாளை

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

என்பது கிழமேல் 24 தென்வடல் 13 1/2 என்று கூறியுள்ள நிலையில் அதற்காகவாவது ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.கருப்பதேவர், இருளப்ப தேவர் பாகம் பிரித்து தன் சொத்துக்களை அனுபவித்து வந்ததாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) இருளப்பதேவரின் சொத்துக்களை வெள்ளியங்கிரித்தேவர் அனுபவித்து வந்ததாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெள்ளியங்கிரித்தேவர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை இறந்து விட்டார். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வெள்ளியங்கிரித்தேவர் எழுதியதாக சொல்லும் பி வா சா ஆ 1 உயிலை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வெள்ளியங்கிரித்தேவர் தனக்கு குழந்தை இல்லாததால் தனது சகோதரியான பொன்னம்மாள் என்கிற கருப்பாத்தாளுக்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

5) பொன்னம்மாள் ஜீவதிசைக்கு பின்பு அவரது மக்கள் கோபால்சாமி, பேச்சியம்மாள், வெள்ளியங்கிரி, ராசு, பழனிச்சாமி, கிருஷ்ணசாமி, கந்தசாமி, சுந்தரம்மாள், தெய்வானை ஆகிய 9 பேரும் சர்வசுதந்திரமாக அடைய வேண்டியது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொன்னம்மாள் என்கிற கருப்பாத்தாளுக்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் குப்பத்தேவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

வாதி கிரயம் வாங்கியதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) பி வா சா ஆ 1 உயிலில் 9 பேருக்கு சமமாக சொத்துக்கள் சேர வேண்டியது என்று கூறியுள்ள நிலையில் அதை 9 பேரும் பாகம் செய்து கொண்டதாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பாகம் செய்து கொள்ளாத நிலையில் மேற்படி சொத்து 9 பேர் பெயரிலும் இருக்க வேண்டும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ல் 5 சொத்துக்கள் குறிப்பிட்டுள்ள நிலையில் எந்த சொத்து தாவா சொத்து என்று என்னால் கூற முடியுமா என்றால் முடியாது. பி வா சா ஆ 1ல் உள்ள சொத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதால் தான் என்னால் எந்த சொத்து என்று குறிப்பிட்டு கூற இயலவில்லை என்றால் சரியல்ல,

7) வாதி மயில்சாமி தாவா சொத்தில் கழிப்பறை கட்டினார் அதற்கு கிழபுறம் ஒரு செப்டிக் டேங்க் அமைத்துள்ளார் என்றால் சரிதான். அதில் தான் கழிவுகள் சென்று சேருகிறது என்றால் சரிதான். இது நாள் வரையில் அந்த அமைப்பு தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு போட்டதற்கு பின்பு அதனை மூடி விட்டார்கள். மூடிய பின்பும் மேற்படி கிழபுறம் உள்ள செப்டிக் டேங்கில் தான் கழிவுகள் சென்று சேருகிறது என்றால் சரிதான். பிரமாண பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான், இந்த வழக்கின் 5 ம் பிரதிவாதி நான் என்றால் சரிதான். ஆனால் என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கையில் 3 ம் நபர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

8) 5 ம் பிரதிவாதியான நான் 10 ம் பிரதிவாதிக்கு பின்பு என்னை சாட்சியாக விசாரிப்பது நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3 ம் நபராக என்னை விசாரணை செய்ய நான் தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளித்துள்ள நிலையில் எனது சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.
பொள்ளாச்சி.